## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 228/2024

**26.09.2025**

## P.W.1- முத்துக்கன்னி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 5, 6, 7வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

பூர்வீக சொத்தில் 3 பங்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து இடையப்பட்டியில் உள்ளது. தாவா சொத்தின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண், நான்குமால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் எனது அப்பா, அம்மா, முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது. எனது அப்பாவுக்கு ஒரு ஆண், 2 பெண் பிள்ளைகள் ஆவோம். மேற்படி 2 பெண்பிள்ளைகளில் நான் மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது உடன்பிறந்த சகோதரி பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர்கள் எனக்கு அனைத்து சீர்வரிசைகள் செய்து திருமணம் முடித்து வைத்தார்கள் என்றால் சரியல்ல.

**14வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

மாயக்காள், ராமர் என்பவரிடம் கிரையம் பெற்றது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராமர் தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் அவர் வீடு கட்டி விவரம் தெரியாது. மேற்படி வீட்டிற்கு பின்பு 7 தென்னை மரங்கள் உள்ளன என்றால் தெரியாது. நான் நடுப்பட்டியில் குடியிருந்தேன் என்றால் சரிதான். 14ம் பிரதிவாதி 3வது பிரதிவாதி இறந்த பின்பு 12 வருடங்களாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பால்ச்சாமி எனது அண்ணன் ஆவார். அவருக்கு தாவா சொத்தில் பங்கு இருக்கிறது என்றால் சரிதான், அவரது பங்கை விற்பனை செய்துவிட்டார். பால்ச்சாமி பங்கை ராமர் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ராமர் பாலச்சாமி பங்கை வாங்கியுள்ளதால் அவரையும், அவரது வாரிசுகளையும் வழக்கில் சேர்க்ககூடாது என்றும், அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை எவ்விதத்திலும் உரிமையை வழக்கு பரிகாரம் பாதிக்காது என்றால் சரியல்ல.

**15வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் மொக்கையாத்தேவர். எனது சொந்த ஊர் நடுப்பட்டி. நான் அங்கு தான் பிறந்ததேன். எனது அப்பாவுக்கு பின்பு தான் எனத அம்மா இறந்தார். எனது அப்பா இறந்ததால் எனது அண்ணனுடன் கூட்டுக்குடும்பமாக இருந்தேன். எனது அப்பா இறந்த தேதி தெரியாது. எனது அண்ணனுக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் தெரியாது. எனது அண்ணனுக்கு பின்பு 1வது பிரதிவாதிக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். ஆனால் எந்த வருடம் நடந்தது என்று தெரியாது. எனது அக்காவுக்கு திருமணம் நடந்தபோது எனது அப்பா உயிருடன் இல்லை என்றால் சரிதான். அதன்பின்னர் தான் எனக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். நான் திருமணம் செய்தபோது சாதி வழக்கப்படி பெண்களுக்கு அசையும் சொத்துக்களும், ஆண்களுக்கு அசையா சொத்துக்களும் கொடுக்கும் வழக்கம் இருந்தது என்றால் சரிதான். சாதி வழக்கப்படி எனக்கும், எனது அக்காவுக்கும் அசையா சொத்துக்கள் கொடுத்து எனது அண்ணன் திருமணம் நடத்தி வைத்தார் என்றால் சரியல்ல. நான் காதல் திருமணம் செய்து கொண்டேன். எனது திருமணத்திற்கும், எனது அக்கா திருமணத்திற்கும் எனது அண்ணன் கடன் வாங்கினார் என்றால் தெரியாது. மேற்படி கடனை அடைப்பதற்காக வீட்டு மனை சொத்துக்களை மலைச்சாமி என்பவருக்கு விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. அதில் ஓரளவிற்கு கடன் அடைக்க முடிந்தது, மீத கடனை அடைக்க முடியாததால் அவரது மனைவியின் நகைகளை விற்பனை செய்து கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி நகைகக்கான தொகைக்கு பதிலாக தனது மனைவிக்கு தான செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் தெரியாது. நான் கூட்டுக்குடும்பத்தில் இல்லாததால் மேற்படி செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்யக்கோரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1975 முதல் 1980 காலகட்டத்தில் எனது அண்ணன் பெயரில் பட்டா, சிட்டா ஏற்பட்டது என்றால் தெரியாது. நான் கூட்டுக்குடும்பத்தில் இல்லாததால் மேற்படி பட்டா, சிட்டாவை ரத்து செய்ய எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. கூட்டுக்குடும்பத்தில் நான் இருந்திருந்தால் தெரிய வாய்ப்பு உண்டு என்றாலும் கூட்டுக்குடும்பத்தில் இல்லை என்பதால் தெரியவில்லை என்றால் சரியல்ல. 24.06.2013ம் தேதி 2ம் பிரதிவாதி 4 முதல்

7 பிரதிவாதிகளுக்கு தாவா குடும்ப சொத்தை தனது கணவர் இறந்தபின்பு அவர் வைத்து சென்ற கடனை அடைப்பதற்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்தை பற்றி தெரிந்தும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியை 3வது பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி 2013ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. கூட்டுக்குடும்பத்தில் இல்லாததால் மேற்படி கிரையம் பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின்பு வீடு கட்டினார் என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2015ல் 3வது பிரதிவாதி தாவா சொத்தில் ரூ.20,00,000 மதிப்புள்ள வீட்டை கட்டினார் என்றாலும் நான் கூட்டு அனுபவத்தில் இல்லாததால் நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும், 3வது பிரதிவாதியும் கூட்டாக சதி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், மேற்படி வீட்டிற்கு எதிராக எந்தவித நிவாரணம் கோரவில்லை என்றால் சரியல்ல. 3வது பிரதிவாதிக்கு மேற்படி வீட்டிற்கான வீட்டு வரி ரசீது மற்றும் பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி வீட்டிற்கான வீட்டு வரி ரசீது மற்றும் பட்டாவை ரத்து செய்யக்கோரி நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வழக்கு நடப்பதற்கு முன்னர் 2 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் பெயரில் கூட்டுப்பட்டா, சிட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தில் எனக்கு உரிமையிருந்திருந்தால் நான் மேற்படி பட்டா, சிட்டாவை ரத்து செய்யக்கோரி விண்ணப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 2 முதல் 7 வரை பிரதிவாதிகளின் பெயரில் பதிவு ஆவணங்களும், வருவாய்த்துறை ஆவணங்களும் ஏற்பட்டிருப்பதால், வருவாய்துறை சார்பாக தாசில்தார் மற்றும் பதிவுத்துறை சார்பாக சார்பதிவாளைரை சேர்த்திருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கை 2018ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 03.01.2019ம் தேதி மேற்படி வழக்கில் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி விவரத்தை உசிலம்பட்டி, சார்பதிவாளரிடம் தெரிவித்து தாவா மனு தாக்கல் செய்திருந்தால் 15வது பிரதிவாதிக்கான கிரைய பதிவு ஏற்பட்டிருக்காது

என்றால் தெரியாது. 15வது பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் தான் தாவா சொத்தில் 59 1/2 சென்டு நிலத்தை 4 முதல் 7 பிரதிவாதிகளிடமிருந்தும், எஞ்சிய 8 1/2 சென்டு நிலத்தை 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளிடம் உரிய பிரதிபிரயோஜனம் கொடுத்து கிரையம் பெற்றார் என்றாலும், 15வது பிரதிவாதியின் கிரைய சொத்தில் எனக்கு உரிமை கோர முடியாது என்றால் தெரியாது. நான் 40 வருடங்களாக தாவா சொத்தில் அனுபவம் செய்யாததால் நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு உரிமையுள்ளது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யாததாலும், 1ம் பிரதிவாதி தனக்கு ஆதரவாக பாகம் கோராததாலும் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் கணவர் பற்றி 1வது பிரதிவாதிக்கு நன்றாக தெரியும் என்பதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தவிர மற்ற ஆவணங்கள் எனது உரிமையை நிலைநாட்டும் ஆவணங்கள் இல்லை என்றால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**10, 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.**

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.26 16:50:58 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சரு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.